*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka*
*18(2), 2025*

# தமிழ் கிறிஸ்தவ நாடக வளர்ச்சியில் நீக்கிலாப்பிள்ளை மரியசேவியரின் மறைபொருள் நாடகப் பிரதிகளில் விவிலிய உள்ளடக்கமும் இலக்கியச் செழுமையும்: ஒரு கலை வரலாற்றுப் பார்வை

**மேரி வினிபிரிடா சந்திரசேகர்**
விரிவுரையாளர்
கிறிஸ்தவ நாகரிகத்துறை
கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Correspondence: winifreeda@univ.jfn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

நாடகங்கள் சமயச் சடங்குகளிலிருந்து தோற்றம்பெற்று இன்று பல நிலைகளிலும் வளர்ச்சிக் கண்டுள்ளன. கிறிஸ்தவ வரலாற்றில் மத்திய காலத்தில் இடம்பெற்ற சடங்குகளில் அதிகளவான நாடகப் பண்புகள் காணப்பட்டமையால் நவீன நாடகத்தின் தோற்றுவாய்க்கு இவை வித்திட்டுள்ளன. அதன்படி முதலில் உயிர்ப்பு நாடகங்களும் தொடர்ந்து பாடுகளின் நாடகங்களும் தோற்றம் பெற்றுள்ளன. பிற்பட்ட காலங்களில் மறைபொருள் நாடகங்கள், புனிதர்களின் வரலாறுடன் தொடர்புடைய நாடகங்கள், ஒழுக்கப் பண்பு நாடகங்கள் என மேலும் அவை வளர்ச்சிக் கண்டுள்ளன. இலங்கையில் 1543இல் பிரான்சிஸ்கன் சபையினரின் உத்தியோகப்பூர்வமான வருகையானது கத்தோலிக்கத்தைப் பரப்புவதற்கு வாய்ப்பளித்தது. இதன்போது நாடகத் துறையில் ஆழ்ந்த அனுபவமுடைய இயேசு சபை குருக்களின் வருகையால் பல நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. 1960களில் இருந்து தமிழ் மொழிக்குரிய தனித்துவமான எழுத்தாக்கத்தில் மரியசேவியர் அடிகளார் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு திருப்பாடுகளின் காட்சிகளை மேடையேற்றியுள்ளார். இவர் மறைபொருள் நாடகங்கள் சிலவற்றைக் கத்தோலிக்க வானொலி சேவையில் ஒலிபரப்புவதில் ஆர்வமாய் ஈடுபட்டுள்ளார். இதற்கென கையெழுத்துப் பிரதியாக ஆவணப்படுத்தப்பட்ட நாடகங்கள் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளின் பின்னர் “மறை பொருள் நாடகங்கள்: தொகுதி - 01” என்னும் தலைப்பில் 2019 ஆண்டு யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தினால் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்நாடக பிரதிகளின் விவிலிய உள்ளடக்கங்களையும் அவற்றின் இலக்கியச் செழுமையையும் வெளிக்கொணர்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரியசேவியர் அடிகளின் கலை, இலக்கிய பங்களிப்பு என்பது பன்முக நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயமாகும். ஆய்வானது அவரின் நாடகத்துறை பங்களிப்புக்களில் ஒரு பகுதியான மறைபொருள் நாடகங்களில், நூலாக வெளியிடப்பட்ட பத்து பிரதிகளை மட்டுமே மையப்படுத்தியுள்ளது. மரியசேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடக பிரதியின் உள்ளடக்கங்களை வெளிப்படுத்தல், விவிலிய அறிவில் ஆசிரியரிடம் காணப்பட்ட ஆளுமையைக் கண்டறியும் இலக்குகள் வழியாக மறைபொருள் நாடகங்களின் இலக்கிய சிறப்புக்களும் ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகளைப் பெறுவதற்கு மரியசேவியர் அடிகளாரின் மேற்கூறிய நூல் பகுப்பாய்வு செய்யப்பட்டு விடயப்பொருள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், விவிலியத்த்தில் யூத கலாசாரப் பின்னணியில் எழுந்த வரலாறு, மறைசார் உண்மைகளைத் தமிழ் பேசும் மக்கள் இலகுவில் விளங்கிப் பயனடையும் வகையில் ஆசிரியர் எவ்வாறான இலக்கிய உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதை வெளிக்கொணர்வதற்கு வரலாற்று ஆதார முறையுடன் உய்த்துணர் முறையியலும் கையாளப்பட்டுள்ளன. யூதப் பின்னணியில் தோன்றிய மிகப்பெரிய வரலாற்றுச் சம்பவத்தை, சாதாரண சமூகமும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய எளிய நடையில், இரசனையோடு எடுத்துரைத்துள்ள முறை அவரின் இலக்கிய நடையின்



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

சிறப்புக்கு மேலும் ஆதாரமாயுள்ளது. மரியசேவியர் அடிகளின் மறைபொருள் நாடக பிரதிகளை ஆழமாக உற்றுநோக்கிய ஆய்வு என்னும் வகையில் இந்த ஆய்வானது தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியப் பரப்பிற்கும் கிறிஸ்தவ இறையியலுக்கும் வலுவாயமையும்.

**திறவுச் சொற்கள்**: மறைபொருள் நாடகங்கள், ஆளுமை, இலக்கியச் சிறப்புக்கள், மரியசேவியர், விவிலியப் பின்னணி

## அறிமுகம்

நாடகங்கள் மக்கள் மனங்களை இலகுவில் கவர்ந்து ஈர்க்கக்கூடிய சிறந்த ஊடகங்களாகும். தமிழ் சினிமாவின் வருகையின் பின்னர் தமிழ் நாடகத்துறையில் தேக்க நிலை ஏற்பட்டது. இந்நிலை ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் பொதுவானது. 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற 'மௌனப் புரட்சியின்' பயனாக சுய மொழிகளில் வளர்ச்சி வலியுறுத்தப்பெற்றது (கனக செந்திநாதன், 1964). சுதேச மொழிகளிலேயுள்ள இலக்கியம், கலை என்பவற்றின் வளர்ச்சிக் கருதி, இலங்கை அரசு ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம், இலங்கைக் கலைக்கழகம் ஆகிய இரு நிறுவனங்களை தாபித்தது. இலங்கைக் கலைக்கழகத்தின் ஒரு கிளையான 'தமிழ் நாடகக் குழு' நாடக வளர்ச்சியையும் ஊக்குவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுள்ளது. ஈழத்து நாடகத்துறை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் எவரும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களை மறந்து விட முடியாது. அவர் மிகப் பழமையான கூத்து முறையிலான நாடகங்கள் முதல் நவீன நாடகங்கள் தோன்றிய ஆரம்பக் காலத்தில் இருந்து அவரது சமகாலம் வரை நாடகத் துறையில் கவனம் செலுத்தியும் நடித்தும் நாடகங்களைப் பயிற்றுவித்தும் நாடகங்கள் தயாரித்தும் வந்த பழம்பெரும் நடிகராவார். ஈழத்து நாடகத் துறையின் தந்தை என அழைக்கப்பட்டார் (கனக செந்திநாதன், 1964). அதுபோன்றே ஈழத்துத் தமிழ்க் கத்தோலிக்க நாடகத் துறையில் 1960களில் இருந்து சிறந்த முன்னோடியாகத் திகழ்ந்தவர் நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளார் ஆவார்.

இவர் கலையூடாக இறைப்பணியாற்றியவர். சிறந்த நாடக எழுத்தாளர், சிறந்த அரங்க ஆளுமை என இன்னும் பன்முகத் துறையிலும் மிளிர்ந்தவர். பல நாடுகளுக்கும் பயணம் செய்து, பன்மொழி பேசும் ஆற்றல் மிக்கவராகவும் விளங்கியுள்ளார். உரோம், லண்டன், ஜேர்மனி, இந்தியா போன்ற நாடுகளில் தனது உயர் கல்வியை மேற்கொண்டு, கல்வியில் புலமைத்துவம் பெற்ற இவர் கலைத் துறையிலும் ஆர்வத்துடன் விளங்கியுள்ளார் (மரியசேவியர், 2019). ஐரோப்பிய நாடுகளில் நாடகத்துறை சார்ந்து பெற்றுக் கொண்ட சிறந்த அனுபவங்களை இலங்கையில் தனது மறைப்பணியைத் தொடர்ந்து ஆற்றிய காலங்களில் 'திருமறைக் கலாமன்றம்' என்ற கலை நிறுவனத்தை நிறுவி, கலையை ஊடகமாகக் கொண்டு மறைபணியாற்றியுள்ளார். 1960களில் நாடகங்களை எழுதுவதைத் தனது சிறந்த கடமையாகக் கொண்டிருந்தார். மேடையேற்றுவதற்காகவும் வானொலியில் ஒலிபரப்புவதற்காகவும் அவரது நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன (மரியசேவியர், 2019). இவ்வாறு சிறந்த ஆளுமையாளரான அவரின் படைப்புக்களில் ஒன்றான 'மறைபொருள் நாடக' பிரதிகளின் உள்ளடக்கங்களையும் அவற்றின் இலக்கியச் சிறப்புக்களையும் ஆய்வானது எடுத்துரைக்கின்றது.

## ஆய்வின் நோக்கம்

நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளாரின் முயற்சியால் நூல் வடிவில் வெளிவந்துள்ள பத்து மறைபொருள் நாடக பிரதிகளையும் ஆய்வுக்குட்படுத்தி, அந்நாடகங்களின் இலக்கிய சிறப்புக்களை எடுத்துரைப்பது.



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

**ஆய்வுப் பரப்பு**

இலங்கையில் கிறிஸ்தவ கலை, இலக்கிய பாரம்பரியத்திற்கு நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளார் வழங்கியுள்ள பங்களிப்பு என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய பன்முகத்தன்மை வாய்ந்தவை. அதிலும் அவர் நாடகத்துறையில் வார்த்தைகள் அற்ற நாடகம், உரைநடை நாடகங்கள், மறைபொருள் நாடகங்கள், கூத்து, திருப்பாடுகளின் காட்சிகள் என இன்னும் பல பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். எனினும் இவ் ஆய்வு மரியசேவியர் அடிகளாரினால் நூல் வடிவில் வெளிவந்துள்ள அவரது மறைபொருள் நாடக பிரதிகளின் தொகுப்பான தொகுதி ஒன்றில் வெளிவந்த பத்து நாடக பிரதிகளை மட்டுமே மையப்படுத்தியுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

1960களில் நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளாரினால் எழுதபட்ட "மறை பொருள் நாடகங்கள்: தொகுதி - 01" என்னும் தலைப்பில் 2019 ஆண்டு யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தினால் நூல் வடிவில் நாடகப் பிரதிகள் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றில் வெளிப்படும் இலக்கிய சிறப்புக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தமிழ் கிறிஸ்தவ இலக்கிய உலகிற்கு எடுத்துரைக்காமல் காணப்பட்டது.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்கள் விவிலிய உள்ளடக்கங்களை மையப்படுத்தியுள்ளன.
- குறித்த நாடக பிரதிகளிலுள்ள விடயங்களை அனைவரும் இலகுவில் விளங்கிப் படிக்கக்கூடியதான எளிய மொழிநடையில் அமையப்பெற்றுள்ளது.
- "மறை பொருள் நாடகங்கள்: தொகுதி - 01" என்னும் நூலில் உள்ளடங்கும் நாடக பிரதிகளில் பல இலக்கிய சிறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

**ஆய்வு முறையியல்**

மரியசேவியர் அடிகளாரின் "மறை பொருள் நாடகங்கள்: தொகுதி - 01" என்னும் நூல் பகுப்பாய்வு செய்யப்பட்டு விடயப்பொருள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், விவிலியத்த்தில் யூத கலாசாரப் பின்னணியில் எழுந்த வரலாறு, மறைசார் உண்மைகளைத் தமிழ் பேசும் மக்கள் இலகுவில் விளங்கிப் பயனடையும் வகையில் ஆசிரியர் இலக்கிய நயத்துடன் எளிய நடையில், இரசனையோடு எவ்வாறு எடுத்துரைத்துள்ளார் என்பதை வெளிக்கொணர்வதற்கு வரலாற்று ஆதார முறையுடன் உய்த்துணர் முறையும் கையாளப்பட்டுள்ளன.

**நீக்கிலாப்பிள்ளை மரியசேவியரின் மறைபொருள் நாடகங்கள்**

விவிலிய விடயங்களை மையப்பொருளாகக் கொண்டு தோற்றம் பெற்ற நாடகங்களே மறைபொருள் நாடகங்கள் என அழைக்கப்படுகின்றன (ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், 2001). இவற்றில் உலக படைப்பு முதல் உலக முடிவு வரையான விடயங்கள் உள்ளடக்கப்படும். மறைபொருள் நாடகங்கள் கிறிஸ்துவின் பிறப்பைக் கருப்பொருளாகக் கொண்டவை, கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தைக் கருப்பொருளாகக் கொண்டவை என இரு வகைக்குள் உட்படுத்தி நோக்கப்படுகின்றன. இவற்றுள் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை மையமாகக் கொண்ட நாடகங்களே நடிகர்கள், நாடக ஆசிரியர்கள், நெறியாள்கைச் செய்வோர் மத்தியில் மட்டுமல்லாது மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன (ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், 2001). இலங்கையில் இவ்வகையான மறைபொருள் நாடகங்களை எழுதி மேடையேற்றிய மரியசேவியர் அடிகளார், அவற்றின் கையெழுத்துப் பிரதிகளை ஒன்றிணைத்து, அவரது கலைப் பயணத்தின் அமுத விழாவை நினைவு கூறும் வகையில் 2019இல் ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். குறித்த நூலில் இடம்பெறும் நாடக பிரதிகள் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளமையானது கலை புலத்தில் ஆசிரியருக்கு இருந்த ஆளுமையை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

மரியசேவியர் அடிகளார் எழுதிய பத்து மறை பொருள் நாடகப் பிரதிகளும் ''மறை பொருள் நாடகங்கள்: தொகுதி - 01'' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன. அவற்றுள் இடம்பெறும் செந்தணல், கவலையின் எல்லை என்னும் இரு நாடகங்களும் பழைய ஏற்பாட்டை மையப்படுத்திய நாடகங்களாகவும் குவலயம் பெற்ற குழந்தை, சோதனைக்களம், இன்றிரவு, எழுதிய கரம், வா மகனே வா, அமலன் காட்டிய வழி, ஒரு துளி, கலக்கம் தீர்ந்த கலிலேயர் போன்ற நாடகங்கள் திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டை மையப்படுத்தியவையாகவும் காணப்படுகின்றன.

**'செந்தணல்' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் மக்கபேயர் நூலிலுள்ள முக்கிய விடயங்களை எடுத்துரைக்கும் நாடகப்பிரதியக 'செந்தணல்' என்னும் நாடகப்பிரதி காணப்படுகின்றது. மக்கபேயர் நூலானது அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சி தொடங்கி யோவான் இர்க்கான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது வரை (கி.மு.175-134) யூத மக்களின் வரலாற்றில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகளை விளக்குகிறது. இந்நூல் யூத மக்கள் தங்கள் புனித இடத்திற்காகப் போராடியதைச் சுட்டிக்காட்டுகிறது.

இதில் இரண்டாம் மக்கபேயர் நூல் திருச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்போர்க்குக் கடவுள் கைம்மாறு அளிப்பார் என்னும் மையக் கருத்தை விளக்குகிறது. நீதிமான்களின் உயிர்ப்பு (7:9, 11, 14, 23, 14:46), இறந்தோருக்காக வேண்டுதல் (12:39-46), மறைசாட்சி இறப்பின் சிறப்பு (6: 18-7:42, 14:37-46), மண்ணக மனிதருக்காக விண்ணகப் புனிதர்களின் மன்றாட்டு (15:12-16) போன்ற பழைய ஏற்பாட்டின் பிற நூல்களில் இடம் பெற்றிராத புதிய கருத்துக்கள் இதில் காணப்படுகின்றன. இந்த இரு நூல்களையும் மையப்படுத்திய கருத்துக்களை உள்ளடக்கி 13 காட்சிகளைக் கொண்டதான நீண்டதொரு நாடகமாக 'செந்தணல்' என்னும் நாடகத்தை ஆசிரியர் எழுதியுள்ளார்.

யூதர்களிடையே செலூக்கிய ஆட்சி (செலுக்கியர் எனப்படுவோர் ஆசிய நாடுகளை ஆக்கிரமித்த கிரேக்கர்கள் ஆவர்) நிலவியபோது, கிரேக்க மயமாக்கல் மூலம் யூதர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள் (இரபேல், 2007). யூதர்கள் மீது கிரேக்கரின் சமய நம்பிக்கை, கிரேக்கப் பண்பாட்டுச் சிந்தனைகளும் திணிக்கப்பட்டன. சிலைகளும் கலைப்பொருட்களும் வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டன. உடற்கல்விக்கான விளையாட்டுத் தளங்கள், நீச்சல் குலங்கள் மிகுந்திருந்தன, விளையாட்டு பயிற்சிகள் நிர்வாண நிலையில் வழங்கப்பட்டன. இவர்களின் இச் செயற்பாடுகள் யூத மக்களை வெகுவாக வேதனைப்படுத்தியது. யூத மறையை விட்டுவிட்டு கிரேக்கப் பண்பாட்டுக் கலாச்சாரத்தை, அவர்களின் கடவுளர்களை (பல தெய்வ வழிபாடு) வணங்கவும் யூதர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். இதன் போது செலூக்கியரின் ஆட்சியை எதிர்த்து மக்கபேயர் போராடினர். குறிப்பாக குரு மத்தத்தியாவின் மூன்றாம் மகன் யூதா (அவரே மக்கபே என்னும் முதல் பெயரைப் பெறுகின்றார்) என்பவர் யூத மறைக்காக உறுதியாக நின்று இந்த புரட்சியைத் தொடங்கி வைத்தார். கிரேக்க மயமாக்கல் மூலம் யூதர்களைப் பலவாறு துன்புறுத்தி வந்த செலூக்கிய ஆட்சியை எதிர்த்து யூதர்களை வழி நடத்தியதால், மக்கபே[1] என்று அழைக்கப்பெற்றார். மக்கபேயரும் இவ்வாறு உறுதியாகப் போராடக்கூடிய போர் ஆயுதமாகச் செயற்பட்டனர். காலப்போக்கில் அவருடைய சகோதரர்கள், அவர்களுக்கு ஆதரவாளர்களாக இருந்தவர்கள், ஏனைய யூதத் தலைவர்கள் அனைவருமே மக்கபேயர் என அழைக்கப்பெற்றனர்.

[1]மக்கபே என்னும் சொல் சம்மட்டி என்னும் பொருள் பெறும். சம்மட்டி என்பது ஒருவகை சுத்தியல், உலோகங்களை தகடாக மாற்றும் பெரிய சுத்தியல்.


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

**கதையமைப்பு:**

நாடகத்தின் முதலாவது காட்சியிலேயே மத்தத்தியா (குரு) கவலையான மனநிலையோடு காட்டப்படுகிறார். அறத்தை அழித்து, கடவுளை அவமதித்து, அவரின் கட்டளைகளை அடியோடு மாற்றுகிறார்கள் என மனம் வருந்துகிறார். அதற்கு அவரது மகன் யூதாவும் (மூன்றாவது மகன்) அவருடைய சகோதரர்களும் நாம் துணிந்து அவர்களை எதிர்ப்போம் என்று நம்பிக்கையூட்டுகிறார்கள். அவர்களுக்கு உதவ நினைக்கும் நாட்டு மக்களும் தங்களோடு இணைந்து கொள்வது நாடகத்தின் இரண்டாவது காட்சியில் இடம்பெறுகின்றது. யூத மக்களை கிரேக்கர் கொலை செய்தார்கள் என்னும் பகுதி காட்சி மூன்றில் இடம்பெறுகின்றது. இதன் காட்சி நான்கு ஓய்வுநாளில் மரித்தவர்கள் குறித்து சமூகத்தவரின் உரையாடல் காட்டப்பட்டுள்ளது.

காட்சி ஐந்தில் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் குறிப்பாக இஸ்ரயேல் மக்களின் வரலாறு நினைவூட்டப்படுகின்றது. மக்கபேயரின் பெருமையைக் காட்சி ஆறு எடுத்துரைக்கின்றது. இப்பகுதியில் யூதாவின் புகழ் மிக அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "வீர வம்சத்தைச் சேர்ந்தவன் அவன்! தீரச் செயல்களில் சிங்கத்தை ஒத்தவன்! தேடிப் போரிடுவதில் அவனுக்கு அவனே தான் நிகர்! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளை வீட்டை விட்டுத் துரத்தி, கோட்டைமேல் இருக்கும் கொடிய எதிரிகளைக் கூட காட்டையே கதி அடையச் செய்த சங்காரச் சிங்கம் அவனே! (மரியசேவியர, 2019). என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எருசலேம் ஆலயம் மீண்டும் தூய்மையாக்கப்படல் பற்றிய குறிப்பைக் காட்சி ஏழு எடுத்துரைக்கின்றது. எட்டாம், ஒன்பதாம் காட்சிகளில் அந்தியோக்குவின் படைவீரர்களின் உரையாடலும் அந்தியோக்கு தான் இழைத்த தீமைக்குத் தனது வாழ்வு முழுவதும் தோல்வி ஏற்பட்டுள்ளது என்னும் குறிப்பு இடம்பெறுகின்றது. பத்தாம் காட்சியில் யூதாவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காட்டப்பட்டுள்ளது. காட்சி பதினொன்றில் போரில் இறந்த யூதர்களுக்குப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட நிகழ்வு சித்தரிக்கின்றது. இது பற்றிய குறிப்பு விவிலியத்திலுள்ள மக்கபேயர் இரண்டாம் நூலில் இடம்பெறுகின்றது. பல போர்களில் வெற்றி பெற்ற யூதாவின் (மறவீரன்) மரணம் ஒரு பாடலினூடாக எடுத்துரைக்கப்படுகின்றது. காட்சி பன்னிரண்டு யுத்தகளத்தில் யூதா உயிர் துறந்தார். யூதாவின் இடத்துக்கு யோனாதாம் நியமிக்கப்பட்டார். யோனத்தான் மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் திரிபோனனின் படையினரினால் கொலை செய்யப்படும் காட்சி காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து யோனத்தானும் அவனின் இரு மக்களும் திரிபோனால் கொலை செய்யப்பட்டுவிட்டார்களே என சீமோன் புலம்புதல் காட்சி பதின்மூன்றில் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சீமோனை திடப்படுத்துகின்றார். 'வல்லரசுகளுடன் ஒப்பந்தம்' செய்துகொள்கிறார். இறுதியில் சீமோன் இறைவனுக்கு நன்றி தெரிவித்து இன்று தொட்டும் மக்கள் அடிமைகளாக வாழாது சுதந்திரமாக வாழட்டும் என்கின்றார். மக்கள் அரசர் காலம் தொடங்கி கிறிஸ்து பிறப்பு வரை ஓரளவு சுதந்திரமாக இருந்தனர். யூதாவின் குடும்பத்தில் கொழுந்து விட்ட செந்தணல் அன்று மட்டுமல்ல இன்றும் எரிந்த வண்ணம் உள்ளது எனக் குறிப்பிட்டு, ஆசிரியர் நாடகத்தின் தலைப்புக்கு ஏற்ற விதத்தில் பாடலுடன் நாடகத்தை நிறைவு செய்கிறார்.

**'கவலையின் எல்லை' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

விவிலியத்தின் ஞான இலக்கியங்களுள் தலைசிறந்த நூலாகிய 'யோபு' என்னும் நூலை மையப்படுத்தியதாக 'கவலையின் எல்லை' என்னும் நாடகம் அமையப்பெற்றுள்ளது. யோபுவின் கதையை மிகப் பொருத்தமான தலைப்புடன் நாடக ஆசிரியர் நகர்த்திச் செல்லும் முறையானது மிகவும் சுவாரஸ்யமானதாகவும் சமகால சமூகத்துக்கு ஏற்ற விளக்கமாகவும் அமைகின்றது. குறிப்பாக நாடகத்தின் தொடக்கத்தைக் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கின்றார். அதில் திரித்துவ கடவுளை வாழ்த்தி ஆரம்பிக்கின்றார் (மரியசேவியர், 2019). நாடகத்தின் தொடக்கத்தில் இடம்பெறும் உரை பகுதியில் மனிதனின் கவலைகள் குறித்து மிகத் தெளிவான விளக்கம் இலக்கிய நயத்துடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "சேற்றிலே செந்தாமரை, சிப்பிக்குள் முத்து,



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

முட்கள் நடுவில் முத்தாடும் ரோஜா'' (மரியசேவியர், 2019) எனக் குறிப்பிட்டு இன்பமும் துன்பமும் கலந்து தான் இவ்வாழ்க்கை எனும் கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

**கதையமைப்பு:**

நாடகம் தொடக்கம் உரை பகுதியுடன் பொருத்தமான பாடல், உரையாடல் என்னும் அமைப்பில் காட்சியளிக்கின்றது. உரை பகுதியில் யோபு குறித்த ஒரு வரலாற்றுப் பார்வை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. யோபு அராபிய நாட்டில் ஊஸ்[2] என்னும் ஊரில் வாழ்ந்து வந்தவர் (மரியசேவியர், 2019). செல்வந்தனான இவர் தீமையை விலக்கி வாழ்ந்துள்ளார். அவர் பொருள் செல்வத்தில் நிறைந்தது போலவே அருள் செல்வத்திலும் நிறைந்திருந்தார். ஆண்டவரின் அடியவராக வாழ்ந்த யோபுவின் பொருள் வளத்தையும் அருள் வளத்தை அறிந்த சாத்தான் அவரை சோதிக்க முற்படுகின்றது. தொடர்ந்து நாடகத்தில் இடம்பெறும் பகுதி சாத்தானுக்கும் கடவுளுக்கும் இடையிலான ஒரு உரையாடல் போன்று காட்டப்பட்டுள்ளது (மரியசேவியர், 2019). அதன்போது யோபுவின் நற்பண்புகளும் தொடர்ந்து யோபுவுக்கு ஏற்படும் சோதனை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி யோபுவிற்கு ஏற்பட்ட சோதனையில் முதலில் யோபுவின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்களின் அழிவு, இவரின் பிள்ளைகளின் மரணம் இடம்பெற இந்நிகழ்வுக்கும் இடையே யோபுவின் பாடல் இடம்பெறுகின்றது. ''ஆ இறைவா இறைவா! இது என்ன சோதனை இறைவா! இறைவா! தாயின் உதரத்திலிருந்து வெறுமையில் வெளிப்பட்டேன் மீண்டும் அதே வெறுமைக்குத் திரும்புவேன் இறைவன் தந்தார்! இறைவனே எடுத்தார்! அவர் பெயர் நீடூழி வாழட்டும்'' (மரியசேவியர், 2019). அதன் என இறைவனைப் புகழ்கிறார்.

நாடகத்தின் அடுத்த கட்டமாகச் சாத்தான் கடவுளின் அனுமதியுடன் இதைவிட அதிகமான துன்பத்தை யோபுவிற்கு கொடுக்கின்றான். யோபுவின் உடலிலே புண்கள் உண்டாகின. யோபுவுக்கு ஆறுதல் கூற ஏழு நாட்கள் யோபுவின் அருகில் இரவும் பகலுமாக நண்பர்கள் இருந்தனர். யோபு புலம்பினார், குதறினார், பதறினார் (மரியசேவியர், 2019). நான் இன்று அனுபவிக்கும் துன்பத்திற்கு என்ன காரணம் என இறைவனிடம் கேட்பது போன்று அமையப்பெற்றுள்ளது. இறுதியில் இறைவன் காட்சி கொடுக்கிறார் இறைவனைக் கண்டதும் யோபு மௌனம் காக்கிறார். உடனே யோபு மன்னிப்பு இறைவா! மன்னிப்பு! மதியிழந்து பேசிவிட்டேன் என்று குறிப்பிடுகின்றார். தொடர்ந்து இவ்விவிலியப் பகுதியின் இறையியல் எடுத்துரைக்கப்படுகின்றது. அதன் முக்கிய செய்தி "ஒருவருக்குத் துன்பம் ஏற்படுவது அவன் செய்த குற்றத்தின் விளைவு அல்ல. ஆனால் மக்கள் அவ்வாறு மட்டுமே எண்ணுகிறார்கள். அது தவறு நீதிமானும் இறை திட்டத்தை நிறைவேற்றத் துன்பப்படலாம். தங்கம் நெருப்பிலே புடமிடுவதைப்போல ஒருவனின் உள்ளமும் துன்பத்தினாலே தூய்மைப்படுத்தப்படலாம்'' (மரியசேவியர், 2019) என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. நாடகத்தின் இறுதிப் பகுதியானது நீதிமான் ஒருவரின் துன்பம் அவரை இறைவனின் மீட்புத் திட்டத்தில் இணைக்கிறது என்னும் செய்தி எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

**'குவலயம் பெற்ற குழந்தை' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

'குவலயம் பெற்ற குழந்தை' என்னும் நாடகத்தில் வரும் விடயங்களை விவிலியத்தில் மத்தேயு 1:18-2:12, லூக்கா 2:1-21 பகுதிகளில் காணலாம். ஏனைய நாடகங்களுடன் இந்நாடகத்தை ஒப்பிட்டு நோக்குகையில் அதிகமான பாடல்களை கொண்டமையப்பெற்ற நாடகமாகக் காணப்படுகின்றது.

---

[2] ஊசு என்ற நாடு எங்கு உள்ளது என துல்லியமாகக் கூற முடியாது. ஆனால் இது மிகவும் செழிப்பான ஒரு பகுதி. பாலை நிலத்திற்கு அருகில் உள்ளது. விவிலிய அறிஞர்கள் இந்நாடு யோர்தான் ஆற்றுக்கு கிழக்கில் இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்கள்.



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

இங்கு இடம்பெறும் பாடல்கள் கீர்த்தனை வடிவில் அமையப்பெற்றுள்ளன. இந்நாடகமானது கடவுள் வாழ்த்து, வரலாற்றில் வாழ்ந்தவர், வஞ்சகனை வென்றவர் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**கதையமைப்பு:**

நாடகத்தில் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து இதில் தொடக்க நூலில் இடம்பெறும் முதல் பெற்றோரின் பாவம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதில் "அருள் நிலை சிதைந்து, அவல கெதிக்கு ஆளாகிய ஆதி மனிதர் ஆதாமும் ஏவாளும்…" (மரியசேவியர், 2019) என அதன் உரைப்பகுதி அமைகின்றது. இப்பகுதியில் இறைவன், ஆதாம், ஏவாள் இவர்களுக்கு இடையிலான உரையாடல் பாடல் வடிவில் அமைந்துள்ளது. ஏவாளின் பாவம் பின் வந்த சந்ததியைப் பாதித்தது என எடுத்துரைத்துள்ளார். அதனை எடுத்துரைக்கும் ஆசிரியர் பின்வருமாறு சிறப்பிக்கின்றார். "துணையென வந்தவள் துயரையும் தந்தாள்…" (மரியசேவியர், 2019) தொடர்ந்து எசாயா இறைவாக்கினர் இயேசுவின் பிறப்பை முன் அறிவித்தார் எனும் செய்தி எடுத்துரைக்கப்படுகிறது.

நாடகத்தின் பகுதி இரண்டானது மரியன்னையின் துன்பமான சூழ்நிலை எடுத்துரைக்கப்பட்டு, அதனூடாக சமூகத்துக்குத் துன்பத்திலும் இன்பத்தைக் காணும் இலட்சியத்தின் அவசியம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு ஆசிரியர் மரியன்னையின் துன்ப சூழலை எடுத்துரைத்து, துன்பங்களை எவ்வாறு கையாள்வது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். வளனார் பாத்திரமும் நாடகத்தில் கவலையின் உச்சநிலையில் வைத்து நோக்கப்பட்டுள்ளது. இதனைப் பின்வருமாறு "எவ்வளவு துன்பம் என் வாழ்வில் அனுபவித்துள்ளேன் ஆனால் இன்றுதான் இதயம் பிளக்கும் இனம் புரியாத துன்பத்தைச் சுமக்கும் நிலையில் உள்ளேன்." (மரியசேவியர, 2019) என எடுத்துரைத்துள்ளார். இங்கு மரியன்னையைத் தாங்கிச் சென்ற கழுதையின் கவலையையும் எடுத்துரைப்பதன் மூலம் அன்று நிகழ்ந்த துன்பமான சூழல் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 'குகை' வரவேற்பதும் 'தாரகை' "பார்த்தேன் சிரித்தேன் பணிவுடன் விழுந்தேன்" என உதவுவதும். சமூகத்தில் அதிக முக்கியத்துவம் பெறாத இடையர் இங்குச் சிறப்பிக்கப்படுவதும் நாடகத்திற்கு மேலும் சிறப்பு தருகின்றது.

நாடகத்தின் மூன்றாவது பகுதி செய்யுள் வடிவில் மிகத்தெளிவாகக் குழந்தை இயேசுவைத் தரிசிக்க வந்த மூன்று ஞானிகள் குறித்து எடுத்துரைக்கின்றது. (மெல்கியோர், கஸ்பார், பலதாசர்) ஏரோது இயேசுவைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்னும் செய்தியும் இதனுடன் இணைகின்றது. அதாவது இயேசுவின் குழந்தைப்பருவம் குறித்து மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் இடம்பெறும் குறிப்புகளை இணைத்து வழங்கியுள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கது. ஏரோது அரசரின் சூழ்ச்சியிலிருந்து குழந்தை பாதுகாக்கப்பட்டார் என்பதை எடுத்துரைக்கும் முறையில் அமைந்துள்ளது.

**'சோதனைக் களம்' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

இந்நாடகத்தின் மையப்பொருள் இயேசுவின் சோதனையை எடுத்துரைப்பதாகும். இதனை திருவிவிலியத்தின் மத்தேயு 4:1-11, மாற்கு 1:12-13, லூக்கா 4:1-13 ஆகிய சமநோக்கு நற்செய்திகளில் காணலாம். இந்த நாடகத்திலும் ஆசிரியர் விவிலியக் குறிப்புகளுடன் சில கற்பனை பாத்திரங்கள், நிகழ்வுகளையும் இணைத்துள்ளார். மேலும் சமகால சூழலில் மக்கள் எதிர்நோக்கும் சோதகைள் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் வரும் முதல் மூன்று பாத்திரங்களும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை குறித்துப் புலம்பும் பாணியில் அமைத்துள்ளதுடன் சோதனை பற்றிய தெளிவான புரிதலை முன்வைக்கின்ற நிலையில் நாடகம் காணப்படுகின்றது. (மத்.4:1-11, மாற்.1:12-13, லூக்.4:1-13)


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

**கதையமைப்பு:**

நாடகமானது இயேசுவின் திருமுழுக்கு, தொடர்ந்து இயேசு சோதிக்கப்படல் போன்ற குறிப்பைத் தருகின்றது. நாட்பது நாட்கள் சாதாரண மனிதன் உணர்வுகளோடு உணவு தவிர்த்து, நோன்பிருந்தார் அதன்பின் பசியுற்றார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அலகை சதித்திட்டமிடுகிறது. இதனை ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''தீட்டுகிறேன்! ஓர் திட்டம்! காட்டுகிறேன் என் கொட்டம்! மூட்டுகிறேன் என் சோதனையின் தீயை! மாட்டுகிறேன்! வேதனைக்குள்! இந்த மதி கெட்ட கிறிஸ்துவை!...'' (மரியசேவியர், 2019)

திருவிவிலிய குறிப்பின்படி சாத்தான் இயேசுவைச் சோதித்தபோது ''நீர் இறைமகன் என்றால் இந்த கற்களை அப்பம் ஆக்கும்படி கட்டளையிடும் என்று குறிப்பிடுகின்றது.'' அதற்கு இயேசுவின் பதில் ''மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாகக் கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றிலும் வாழ்வார்'' என்பது ஆகும். ஆயினும் இப்பகுதியில் நாடக ஆசிரியர் பழைய ஏற்பாட்டின் நிகழ்வையும் இணைப்பது ஆசிரியரின் ஆழமான விவிலிய அறிவை எடுத்துரைக்கின்றது. மேலும் புதிய ஏற்பாட்டில் மத்தேயு 14:13-21, மாற். 6:30 பகுதிகளில் வரும் இயேசுவின் அருஞ்செயல்களில் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் எனும் விடயத்தையும் இதனோடு இணைத்துக் கூறுகிறார். ஐயாயிரம் பேருக்கு உணவளித்த இயேசு கிறிஸ்து தனது சுயநலத்திற்காக, சொந்த நன்மைக்காகக் கற்களை அப்பமாக மாற்றி வயிற்றுப் பசியை போக்கவில்லை. உடலிற்கு உணவளிக்கும் அப்பத்திலும் மேலாக உள்ளத்திற்கு உணவளிக்கும் அப்பமுண்டு என்பதை உறுதியுடன் எடுத்துரைக்கும் பணியில் நாடகம் அமைந்துள்ளது. ''மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல ஆண்டவர் வாயினின்று மலரும் ஒவ்வொரு வார்த்தையாலும் உயிர் வாழ்கின்றார்'' என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

சாத்தான் மீண்டும் இறைமகனை எருசலேமுக்கு அழைத்துச் சென்று ஆலயத்தின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, நீர் இறை மகன் என்றால் கீழே குதியும் கடவுள் தன் தூதர்களை அனுப்பிப் பாதுகாப்பார்'' என்னும் இரண்டாவது சோதனை இதில் உள்ளடக்குகின்றது.

மூன்றாவது சோதனையாக மத்தேயு நற்செய்தி குறிப்பிடுவதற்கு அமைய இயேசுவைச் சாத்தான் மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும் அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி அவரிடம் ''நீ நெடுஞ்சான் கிடையாக விழுந்து என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்'' எனக் குறிப்பிடும் பகுதி அமைந்துள்ளது.

நாடகத்தில் இடையிடையே ஆசிரியர் அரச செல்வச்செழிப்பு, அதிகார சொகுசு சார்ந்த வாழ்க்கை என்பவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைத்துள்ளார். (நாடகத்தில் அரசனுக்கும் புலவனுக்கும் இடையில் இடம்பெறும் உரையாடலில் அரச வாழ்க்கை சார் விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது) நாடகத்தின் இறுதிப் பகுதி சோதனை என்பது இறைமகன் கிறிஸ்துவையும் விட்டுவைக்கவில்லை என்பதை எடுத்துரைப்பதாகவும், தீய நாட்டங்களைத் தீக்கிரையாக்கி, இறைவன் திருவருளில் அவர் திரு வார்த்தையில் வாழ்வோம்! வளர்வோம்! என்ற கருத்துடன் நிறைவு செய்கின்றார். இதனை பின்வருமாறு மிகத் தெளிவான விருத்தப்பா வடிவில் எடுத்துரைத்துள்ளார்.

''ஈசனாம் யேசு நச்சப் பேயடன் வென்று
தாசராம் தரணியோர்க்கு தனிநெறி தந்தார் அன்றோ
மனித வாழ்விலும் மாசுரைத்து மக்களை மயக்கி மாயக்கி மாயத்
தாழ்வினில் விழுத்தியாட்டும் சோதனைக் களத்தில் வெல்வோம்!'' (மரியசேவியர், 2019)

**'இன்றிரவு' என்னும் நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

விவிலியத்தில் லூக்கா நற்செய்தியில் மட்டும் இடம்பெறும் 'அறிவற்ற செல்வன்' உவமையை நாடக வடிவில் ஆசிரியர் வழங்கியுள்ளார். (லூக்கா *12:13-21*) இந்நாடகத்தில் நான்கு காட்சிகளும் மூன்று பாத்திரங்களும் இடம்பெறுகின்றன. கடவுள் முன் செல்வம் அற்றவனாய் தமக்காகவே செல்வம் திரட்டுபவனுக்கு நிகழும் அவல நிலை நாடகத்தின் தொடக்கப் பகுதியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**கதையமைப்பு:**

நான்கு காட்சிகளைக் கொண்டமையப்பெற்ற நாடகத்தில் பணக்காரன் ஒருவருடைய சொல்வபெருக்குப் பற்றியும் அதன் நிலையாமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பணக்காரனின் நிலம் நன்றாய் விளைந்தது அவனது பொருளைச் சேர்த்து வைக்க அவனுக்கு இடம் போதாமையினால் அவன் தனது களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்ட நினைக்கின்றான். அவன் ''நெஞ்சே பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருள் உன்னிடம் ஏராளமாய் உள்ளது இனி மகிழ்வாய் இருக்கலாம்'' எனச் சொல்லிக் கொண்டிருக்கையில், இன்றிரவே மரணிக்கப் போகிறாய் சேமித்து வைத்தது யாருக்குக் கிடைக்கும் எனக் கடவுள் கேட்பது போன்று நாடகம் அமையப்பெற்றுள்ளது.

**'எழுதிய கரம்' என்னும் நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

புதிய ஏற்பாட்டின் நான்காம் நற்செய்தியான யோவான் நற்செய்தியிலுள்ள 'விபசாரத்தில் பிடிபட்ட பெண்' என்னும் பகுதியை மையப்படுத்தியதாக இந்நாடகம் அமையப்பெற்றுள்ளது. (யோவான் *8:6-11*)

**கதையமைப்பு:**

யோவான் நற்செய்தியாளர் நேரடியாகக் கண்டவற்றை வைத்தே இயேசுவைப் பற்றி எழுதியுள்ளார் என்னும் விடயத்தை எடுத்துரைப்பதாக நாடகம் ஆரம்பிக்கின்றது. யோவான், வயோதிபர், பாவிப்பெண், கிறிஸ்து ஆகிய நான்கு பாத்திரங்களுடன் நாடகத்தின் முன் காட்சி பகுதி ஆரம்பிக்கின்றது. இதில் வரும் வயோதிபர் யூத சட்டங்களை எடுத்துரைக்கிறார். குறிப்பாக, ''பாவிகளின் தலையான பாவமான விபச்சாரத்தில் எந்தப் பெண்ணாவது பிடிக்கப்பட்டால் கர்ணகொடூரமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது எமது பழம் பெரும் கொள்கை! இதற்கு எல்லாம் முரணாக இந்தக் கிறிஸ்து போதிக்கிறான்! பாவிகளைக் கண்டிக்காது பரிவிரக்கம் காட்டுகிறான்!...'' *(மரியசேவியர், 2019)* என்னும் வகையில் அமையப்பெற்றுள்ளது. இயேசுவின் புரட்சியான புதிய நோக்கம் எமது யூத இனத்தவரின் வரலாற்றுக்கே வறட்சியைக் கொண்டுவந்துவிடும் என்பதால் கிறிஸ்துவைத் தொலைத்துக் கட்டி விட வேண்டும். அதற்கு ஏதாவது சூழ்ச்சி செய்ய வேண்டுமென உரையாடும் பாங்கில் அமையப்பெற்றுள்ளது.

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி வழங்கும் யூத குல பண்பாட்டிற்குரிய இந்நாடகத்தில் வரும் பாவிப்பெண் சரித்திரப் புகழுக்குத் தகுதியற்றவள். இதனை அவளே குறிப்பிடுகையில், ''பாவிப்பெண்ணாகிய என்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் ஒரு கட்டம் வரலாற்றில் வரையப்படுகின்றது என்றால், அதற்கு என்னுடைய பாவம் அல்ல காரணம், கிறிஸ்து பாவியாகிய என் மீது காட்டிய பாசமே'' *(மரியசேவியர், 2019)* என்கிற வகையில் ஆசிரியர் குறிப்பிடுவது சிறப்பாக அமையப்பெற்றுள்ளது.

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் அழைத்து வந்து, குருவே இவளை நாம் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டோம். இத்தகைய குற்றம் செய்தவர்களைக் கல்லால் எறிந்து கொல்வது மோசே எமக்குக் கொடுத்த சட்டம். இதற்கு உமது கருத்து என்ன? என வினாவும் வகையில் இயேசுவில் குறைக்காண முற்படும் நோக்குடன் நாடகத்தின் இப்பகுதி



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

அமையப்பெற்றுள்ளது. ஆயினும் இயேசு அதற்கு "உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் பெண்ணின் மேல் கல்லெறியட்டும்" எனக் கூறுவது அவர்களைச் சிந்திக்க வைத்தது. இப்பகுதியில் ஆசிரியர் தனித்துவமான விடயத்தை எடுத்துரைப்பது போன்று உள்ளது. அதாவது இயேசு தரையில் எழுதினார் என விவிலியம் குறிப்பிட்டாலும், நாடகத்தில் மரணத்தின் முனையில் பரிதவித்துக் கொண்டிருந்த பாவிப்பெண்ணின் வார்த்தைகளானது, இயேசு நமது பாவங்களைப் பட்டியலிட்டார் என்பதை எடுத்துரைக்கின்றது. "நீர் தரையில் எதையோ கை போனபோக்கில் எழுதிக்கொண்டிருக்கிறீர் என்று நினைத்தார்கள் உம்முடைய ஒவ்வொரு எழுத்தும் தங்களுடைய பாவங்களைச் சுட்டிக் காட்டுவதாக உணர்ந்தார்கள்." (மரியசேவியர், 2019) 'கள்ளன், பொய்யன், காமுகன்' என்று எழுதியதைக் கண்டதும் ஓடிவிட்டனர் என்பதை பாவிப்பெண் இயேசுவிடம் எடுத்துரைக்கின்றாள். தொடர்ந்து இயேசு உன்னை எவரும் தீர்ப்பிடவில்லை. நானும் தீர்ப்பிடவில்லை. எனவே அமைதி பெற்று செல்லம்மா! என்று குறிப்பிடுவதுடன் நாடகம் நிறைவு பெறுகின்றது.

**'வா மகனே வா' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலுள்ள லூக்கா நற்செய்தியில் இடம்பெறும் 'காணாமற் போன மகன்' உவமையை நாடக வடிவில் ஆசிரியர் வழங்கியுள்ளார். (லூக்கா 15:11-32) நாடகத்தில் ஒன்து காட்சிகள் இடம் பெறுகின்றன. இதன் பிரதான பாத்திரங்களாகத் தந்தை, மூத்தமகள், இளைய மகன் போன்றோர் காட்டப்பட்டுள்ளனர். ஏனைய சில துணைப் பாத்திரங்களும் இதில் இணைகின்றன. இதன் உரைப் பகுதியில் 'பாவியின் மனமாற்றம்' குறித்து இயேசுவின் போதனை அமையப்பெற்றுள்ளது. அதில் "மனம் திரும்ப அவசியமற்ற தொண்ணூற்றொன்பது நீதிமான்களையிட்டு வரும் இன்பத்தைப் பார்க்கிலும் மனம் திரும்பும் ஒரு பாவியின் நிமித்தம் வானுலகில் எல்லையில்லா மகிழ்ச்சியுண்டு" என எடுத்துரைப்பதாக அமைகின்றது. தொடர்ந்து இயேசு கூறிய உவமையை ஆசிரியர் மிகத்தெளிவாக ஒன்பது காட்சிகளில் முன்வைத்துள்ளதுடன் இடையிடையே பாடல்களையும் இணைத்துள்ளார்.

**கதையமைப்பு:**

நாடகத்தின் தொடக்கக் கட்டமானது தந்தை ஒருவருக்கு இரு பிள்ளைகள் இருப்பதாகவும், பிள்ளைகளில் இளையவன் தந்தையை நோக்கி 'அப்பா! சொத்தில் எனக்குள்ள பங்கை எனக்குத் தரவேண்டும்' எனக் கேட்பதாகவும் அமைகின்றது. இதன்போது நாடகக் காட்சியின் முதல் பகுதியிலேயே சகோதரர்களுக்கு இடையிலான வாக்குவாதம் இடம்பெறுகிறது. மூத்தவன் இளையவனை நோக்கி "துரோகி! தொலைந்து போகட்டும் அப்பா! இவன் இருக்கும் ஒவ்வொரு வேளையும் அவமானம் அதிகரிக்கின்றது" என்கின்றான் (மரியசேவியர், நீ., 2019).

இளைய மகன் தந்தையை விட்டுச் செல்ல முடிவெடுத்து, "உரிமையைக் கோருகின்றேன்! கேட்கும் உடைமையைக் கொடுப்பது உங்கள் கடமை! அதை மறுப்பது வெறும் மடமை!" (மரியசேவியர், 2019) எனச் சொத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டை விட்டுச் செல்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றான். ஆயினும் தந்தை "கேளடா! இதை உன் உள்ளத்தில் பதித்து வை! உன் வரவிற்காக வாழ்விருக்கும் வரை காத்திருப்பேன். வான்முகம் பார்த்த பயிர் போலக் கதிரவனைக் காணக் கடுந்தவம் காக்கும் கமலத்தைப் போல என்னை நீ மறந்தாலும் உன்னை நான் மறவேன்! மறவேன்!" எனக் குறிப்பிடும் காட்சிப்பகுதி மனதை நெகிழவைக்கின்றது (மரியசேவியர், 2019).

இரண்டாவது காட்சியில் இளைய மகன் தனது நண்பர்களுடன் இணைந்து இன்பவாழ்வு நுகரும் தன்மையை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். இதன் மூன்றாவது காட்சி தந்தை இளைய மகனை நினைத்து மனம் கலங்கும் காட்சியாக அமைகின்றது. மகனை நினைத்து புலம்புகின்றார் "ஆ மகனே! என் மகனே பெற்ற மனம் வெடிக்குதடா! பெரும் அன்பு துடிக்குதடா! நன்மை தீமை


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

புரியாது நீ வாழ்க்கை என்ற கடலில் காலடி எடுத்து வைத்தாயே! மாய வலை வீசி மயக்கும் மொழி பேசி தன் மையலிலே மூழ்க வைக்கும் மண்ணுலகம் உன்னை என்னதான் செய்து விட்டதோ? யானறியேன்'' (மரியசேவியர், *2019*). என மனம் கலங்கும் போது மூத்த மகன் தந்தைக்கு ஆறுதல் கூறுகின்றான் நாடகத்தின்

நான்காவது காட்சியில் இளைய மகனுடன் இருந்த நண்பன் அவனது பணத்தை சூறையாடிக் கொண்டு சென்று விட்டான். அதனை அறிந்தவன் கோப வெறி கொள்கிறான். இதன் ஐந்தாவது காட்சி தந்தை மகனுக்காகக் காத்திருப்பது காட்டப்பதுவதுடன், பாவி அழிய வேண்டும் என்பது ஆண்டவர் திட்டம் அல்ல நல்வழி அடைந்து வாழ வேண்டும் என்பதுதான் அவர் சித்தம் எனும் விடயம் எடுத்துரைக்கப் படுகின்றது. ஆறாவது காட்சியில் இளைய மகன் பணத்தையும் நண்பர்களையும் இழக்கின்றான் தனக்கென வேலை தேடி வேலை செய்யும் காட்சி இடம் பெறுகின்றது. ஏழாவது காட்சி மகன் மீண்டும் வருவான் என தந்தை தள்ளாடும் வயதிலும் தவிக்கின்றார். இதில் தந்தையின் எதிர்பார்ப்பு கட்டப்பட்டுள்ளது. எட்டாவது காட்சி இளைய மகனின் மனவேதனை எடுத்தியம்பப்படுகின்றது. ''பசி என்றால் எதுவெனத் தெரியாது பாங்காக வாழ்ந்த நான் பன்றிகள் உணவின் பங்கிற்கு முதலாகப் பலத்த சண்டையிட வேண்டியிருக்கிறது'' (மரியசேவியர், *2019*) எனக் குறிப்பிடுவதன் மூலம் அவனின் துன்பமான சூழ்நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நாடகத்தின் இறுதி காட்சியாகிய ஒன்பதாவது காட்சி தந்தை தன்னைத் தேடி வந்த மகனை உடனே மன்னிக்கின்றார் என்பது காட்டப்படுவதுடன் நாடகம் நிறைவு பெறுகின்றது.

**'அமலன் காட்டிய வழி' என்னும் நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலுள்ள லூக்கா நற்செய்தியில் *10:2-37* வரையுள்ள பகுதி நாடகத்தில் பிரதான பகுதியாக அமைந்துள்ளது. குறிப்பாக 'அன்பு' குறித்தே நாடகம் பிரதானமாகப் பேசுகிறது. இறைவன் நிறை அன்பின் வடிவம்! அன்பின் பிறப்பிடமாய் அதற்கு நல் உறைவிடமாய் திகழ்பவர் என்பது நாடகத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**கதையமைப்பு:**

'அன்பு' குறித்த இயேசுவின் உயரிய போதனைகள் நாடகத்தின் தொடக்கப் பகுதியில் குறிப்பிடப்படுகின்றது. ''கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நானோ உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரை அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்…'' (மரியசேவியர், *2019*) எனத் தொடர்கின்றது. தொடர்ச்சியாகச் சட்ட வல்லுநர் ஒருவர் இயேசுவிடம் உரையாடும் காட்சி இடம்பெறுகின்றது. அதில் குருவே வாழ்வுக்கு வழி காட்ட வந்த வள்ளல் பெருமானே, நான் முடிவில்லா வாழ்வைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும் வகையில் அமைந்துள்ளது. இயேசு பதிலாகச் சட்ட நூலில் குறிப்பிடப்படும் விடயத்தைக் கேட்பது போன்று அமைவதால் ''உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு வலிமையோடும் முழு மனதோடும் அன்பு செய்வாயாக'' என்னும் விடயம் தெளிவுபடுத்தப்படுகின்றது (மரியசேவியர், *2019*).

தொடர்ந்து அயலான் யார் என்பதைத் தெளிவுபடுத்த 'நல்ல சமாரியன்' உவமை நாடகத்தில் பிரதானமாக இடம்பெறுகின்றது. நாடகமானது இயேசு கதைக் கூறும் பங்கில் அமைய இடையிடையே பொருத்தமான காட்சிகள் இடம்பெறுவது போன்று சிறப்பான முறையில் காட்சிப்படுத்தப்படும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் காலத்தில் சமாரியர் யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக விளங்கினர். ஆயினும் சமாரியன் ஒருவனின் அன்பை நாடகம் மிகத் தெளிவாக எடுத்துரைப்பதானது, அவரது சுயநலமற்ற தியாகம் நிறைந்த அன்பை வெளிப்படுத்துகின்றது. நாடகத்தின் இறுதிப் பகுதி ''அன்பே இறைவன்! அன்பு அனைத்துலகின்


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

*வாழ்வு! அன்பு வாழ்வே அருள் வாழ்வு! அன்பே அமலன் காட்டிய வழி''* என்று குறிப்பிட்டு நாடகத்தின் தலைப்புக்கு ஏற்ற விதத்தில் ஆசிரியர் நாடகத்தை நிறைவு செய்துள்ளார்.

**'ஒரு துளி' என்னும் நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

நாடகத்தில் வரும் கதையின் மையப்பொருள் விவிலியத்தின் லூக்கா நற்செய்தியில் மட்டுமே இடம்பெறும் 'செல்வரும் இலாசரும்' என்னும் உவமையை மையப்படுத்திய பகுதியாகும். (லூக்கா *14:19-31*) நாடகத்தில் எட்டு காட்சிகள் இடம்பெறுகின்றது. இதில் மைய பாத்திரங்களாக இலாசர், எலியேசர், எபநேசர் ஆகியோர் காணப்படுகின்றனர். அதன் முகவுரை இப்பகுதியில் இயேசு தம் சீடர்களுக்குத் திருவாய் மலர்ந்து அருளிக் கூறினார்… என அவரது போதனையுடன் தொடங்குவதாக நாடகம் அமைந்துள்ளது.

**கதையமைப்பு:**

நாடகத்தின் தொடக்கக்காட்சி வீதியோரம் இடம்பெறுகின்றது. ஏழை இலாசரின் வேதனையானது அவலச் சுவையாக நாடகத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. *''ஊர் இல்லை பேர் இல்லை உற்றார் பெற்றார் எவருமில்லை உறவில்லை உலக சுகமில்லை உறைந்து வாழ இடமுமில்லை. அனாதை! அபலை இந்த ஏழை இலாசர்! அவனியில் ஓர் அந்தரித்த அப்பாவி…''* என இலாசர் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (மரியசேவியர், *2019*)

பணக்காரனின் வீட்டு வாசலில் இருக்கும் இலாசர் என்பவர் கடவுள் பக்தியுடையவர் என்பதைக் காட்ட நாடகத்தில் *''கடவுள் கடவுள் என்று கத்துகிறாய் ஏன்? அந்த கடவுளுக்குக் கண்ணில்லையா உன் கவலையைத் தீர்க்க''* (மரியசேவியர், *2019*) எனக் குறிப்பிடும் பாங்கில் அமைந்துள்ளது. இதன் இரண்டாவது காட்சியில் பணக்காரன் வீட்டில் நடைபெறும் கொண்டாட்ட நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து நாடகத்தின் மூன்று, நான்கு, ஐந்தாவது காட்சிகளில் மரணம் குறித்த விளக்கமும் நித்திய வாழ்வின் தேவையும் உணர்த்தப்பட்டுள்ளது. இதன் ஆறாவது காட்சி பணக்காரனின் இறப்பையும் காட்சி ஏழு இலாசரின் இறப்பையும் எடுத்துரைக்கின்றன. இதன் இறுதிக் காட்சியில் மோட்சம், நரகம் என்பன காட்டப்பட்டுள்ளன. பணக்காரனான சீமான் எரி நரகத்தில் இருக்கின்றான். மோட்சத்தில் ஆபிரகாமின் மடியில் இருக்கும் இலாசரை தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து 'ஒரு துளி' நீரினால் தனது நாவைக் குளிர்ச்சி செய்ய அனுப்பும் எனவும் ஒரு வினாடி மாத்திரம் என்னைப் படைத்தவரைப் பார்க்கும் பாக்கியத்தைத் தந்தருளும் எனவும் வேண்டுவது போன்று அமையப்பெற்றுள்ளது. நாடகத்தின் இறுதியில் 'ஒரு துளி' இன்பத்திற்காக இறைவனின் எல்லையற்ற இன்பத்தையே மறந்து வாழக்கூடாது என்பதை உணர்த்துவதுடன் நாடகம் நிறைவு பெறுகின்றது.

**'கலக்கம் தீர்ந்த கலிலேயர்' நாடகத்தின் உள்ளடக்கமும் கதையமைப்பும்**

நாடகமானது விவிலியத்தில் இடம்பெறும் திருத்தூதர் பணிகள் நூலின் *2:1-13* வரையுள்ள 'தூய ஆவியின் வருகை' என்னும் பகுதியை மையப்படுத்தியுள்ளது. அதாவது யூதர்களின் ஐம்பதாம் நாள் (பெந்தகொஸ்து) நிகழ்வை எடுத்துரைப்பதுடன் அதனைத் தொடர்ந்து நிகழப்பெற்ற சில முக்கிய சம்பவங்களையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.

**கதையமைப்பு:**

நாடகத்தின் தொடக்க உரை பகுதியில் *''பரமன் என்ற பரம்பொருள்! பாலஸ்தீன நாட்டுப் பாவை ஒருத்தியின் பச்சிளம் பாலகனாய் உதித்து! அமலன் கிறிஸ்து அகிலத்தோர் அன்பிற்காய் அவலமாய் இறந்தார்''* எனக் குறிப்பிடுவதைக் காணலாம். (மரியசேவியர், *2019*) சாவுக்குச் சவால் கொடுத்து, சாவை வென்றார் என்னும் செய்தியும் நாடகத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (லூக்.*24:1-12*, மாற்.*16:1-8*, மத். *28:1-10*, யோவா.*20:1-10*) உயிர்த்தெழுந்த பின் நாட்பது


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

நாட்களாகத் தம் சீடர்களுக்குப் பல இடத்திலும் காட்சி கொடுத்தார், உரையாடினார், உறுதிப்படுத்தினார். “உன்னத கடவுளின் உத்தம திட்டத்தை உணர்த்தினார். விண்ணரசை மண்ணில் நிறுத்தும் திண்ணமான எண்ணத்தை அறிவித்தார்.” (மரியசேவியர், 2019) இறுதியாக இயேசு விண்ணேற்றம் அடைந்தார் என்னும் செய்தி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இயேசுவைப் பின்தொடர்ந்தத் திருத்தூதர்கள் அவரது மரணத்தின் போது துணிவு அற்றவர்களாக இருந்தார்கள். யூதர்களின் ஐம்பதாம் நாள் (பெந்தகொஸ்து) பண்டிகையின் இறுதி நாளில் திருத்தூதர்களும் சீடர்களும் யூத தலைவர்களுக்குப் பயந்து ஒரே இடத்தில் கூடியிருந்தபோது தூய ஆவியைப் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து துணிவுடன் போதித்து பலருக்கும் திருமுழுக்கு வழங்கியுள்ளனர். “கோழைகளாய் இருந்த இந்தச் சீடரெல்லாம் எப்படி முரட்டுத் துணிவு பெற்றார்களோ தெரியாது? என சதுசேயர் கலங்கினர் (மரியசேவியர், 2019). நாடகத்தில் பேதுரு ஒரு முடவரைக் குணமாக்கும் நிகழ்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதைக்கண்ட சதுசேயரும் பரிசேயரும் பயந்து பேதுருவையும் யோவானையும் கலகக்காரர்கள் எனக் குறிப்பிட்டு, கைது செய்கிறார்கள். அவர்கள் நீதி மன்றத்தில் விசாரணையில் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டபோது, இயேசுவைப் பற்றிப் பேசுவதை நிறுத்தும்படி பணிக்கப்படுகின்றார்கள். ஆயினும் பேதுரு கைப்பாஸிடம் “குருவே! நாங்கள் யாருக்கு அமைய வேண்டும் என்று நீங்களே பதிலளியுங்கள்! மனிதர்களுக்கா? இல்லை! மகத்தான கடவுளுக்காக?...” எம் பேச்சும், மூச்சும், வாழ்வும், வழியும், சிந்தனையும், செயலும் இயேசுவைப் பற்றித்தான் இருக்கும்! அவருக்காய் வாழும் நாம் அவருக்காய் மாளவும் தயங்க மாட்டோம். சென்று வருகிறோம் குருவே என்று கூறி விடை பெறுகின்றனர் (மரியசேவியர், 2019). இவ்வாறு திருத்தூதர்களும் சீடர்களும் கலக்கம் தீர்ந்து பணியில் தெளிவு பெற்றுள்ளனர் என்பதை நாடகத்தில் ஆசிரியர் மிகத் துல்லியமாக எடுத்துரைத்துள்ளார்.

**இலக்கியச் செழுமை**

**நாடகங்களின் கருப்பொருளுக்குப் பொருந்தும் தலைப்புக்களை வழங்கியுள்ளமை**

மறைபொருள் நாடகங்களை எழுதிய ஆசிரியர் நாடகங்களின் கருப்பொருளுக்கு ஏற்ற தலைப்புக்களைத் திறம்படக் கையாண்டுள்ளார். சமயம், கல்வி, கலை என்பவற்றில் ஆசிரியருக்கு இருந்த சிறந்த ஆளுமையை இது வெளிப்படுத்துகின்றது. இந்த நூலில் வெளிவந்துள்ள பழைய ஏற்பாட்டிலுள்ள விடயங்கள் மையப்படுத்தும் நாடகங்களில் முதலாவது ‘செந்தணல்’ என்னும் நாடகமாகும். எவ்வாறு ‘செந்தணல்’ எரிந்து அழிவை ஏற்படுத்துமோ, அவ்வாறே மிகத் தீவிரமாகக் கிரேக்க மயமாக்கலை எதிர்த்து மக்கபேயர் போராடினர் என்பது நாடகத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றது. பழைய ஏற்பாட்டை மையப்படுத்திய இரண்டாவது நாடகமான ‘கவலையின் எல்லை’ என்னும் நாடகமானது நீதிமானாக வாழ்ந்த ‘யோபு’ பற்றியதாயுள்ளது. யோபு என்பவர் கடவுளுக்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்த ஒரு பணக்கார விவசாயி ஆவார். கடவுளுக்கு உகந்த வாழ்வை வாழ்ந்து யோபுவை அலகை சோதிக்கத் திட்டம் தீட்டியதால் ஒரு மனிதன் அடையக்கூடிய அதி உச்ச வேதனையை அவர் அடைந்தார் என்பதை மையப்படுத்தும் வகையில் நாடகத்திற்கு ‘கவலையின் எல்லை’ என்னும் பொருத்தமான தலைப்பை ஆசிரியர் வழங்கியுள்ளார்.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலுள்ள விடயங்கள் மையப்படுத்தப்படும் நாடகங்களில் ‘குவலயம் பெற்ற குழந்தை’ என்னும் நாடகம் இயேசுவின் பிறப்பை எடுத்துரைப்பதாக குவலயத்தை ஆழ வந்தவர் கோமகன் இயேசு என்பதை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. ‘சோதனைக் களம்’ என்னும் நாடகம் மனிதன் கருவுக்குள் தோன்றிவிட்டால் கடல் போன்ற சோதனைக் களத்தை கடந்துதான் கடவுளின் கரையை அடைய முடியும்! என்பதை எடுத்துரைத்து, கிறிஸ்துவும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. சோதனை என்பது இறைமகன் கிறிஸ்துவையும் விட்டுவைக்கவில்லை என இயேசு அலகையினால் சோதிக்கப்பட்டதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். ‘கலக்கம் தீர்ந்த கலிலேயர்’ என்னும் நாடகததின் மைய விடயம்


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

திருத்தூதர்களின் மேல் தூய ஆவி பொழியப்பட்டதை எடுத்துரைக்கின்றது. இயேசுவைப் பின்தொடர்ந்த திருத்தூதர்கள் அவரது மரணத்தின் போது துணிவு அற்றவர்களாக பயந்து ஒரே இடத்தில் கூடி இருந்த பொழுது தூய ஆவி பெழியப்பட்டு இறை வார்த்தையை எடுத்துரைக்கத் தொடங்கினர். இதன் பின்னணியை எடுத்துரைப்பதாக இந்த நாடகம் அமையப்பெற்றுள்ளது.

மேலும் இயேசுவின் போதனைகளை மையப்படுத்திய நாடகங்களில் உவமைக் கதையை உள்ளடக்கும் 'இன்றிரவு' என்னும் தலைப்பில் அமைந்த நாடகமானது கடவுள் முன் செல்வம் அற்றவனாய் தமக்காகவே செல்வம் திரட்டிய செல்வந்தன் அதனை அனுபவிக்க முடியாது போகும் அவலத்தை எடுத்துரைக்கும் வகையில் இந்நாடகம் அமைந்துள்ளது. 'இன்று இரவே உனது உயிர் எடுக்கப்படும்' நீ சேமித்து வைத்தது உனக்குப் பயன்படாது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் நாடகம் அமையப்பெற்றுள்ளது. மனம் திரும்ப அவசியமற்ற தொண்ணூற்றொன்பது நீதிமான்களையிட்டு வரும் இன்பத்தை விடவும் மனம் திரும்பும் ஒரு பாவியின் நிமித்தம் வானுலகில் எல்லையில்லா மகிழ்ச்சியுண்டு என்பதை எடுத்துரைக்கும் வகையில் 'வா மகனே வா' என்னும் தலைப்பில் நாடகத்தை எழுதியுள்ளார்.

'அமலன் காட்டிய வழி' என்னும் நாடகத்தின் கருப்பொருளாக அமைவது 'அன்பு'. இறைவன் நிறை அன்பின் வடிவம்! அன்பின் பிறப்பிடமாய் அதற்கு நல் உறைவிடமாய் திகழ்பவர். இதனை எடுத்துரைக்கும் வகையில் நல்ல சமாரியன் உவமையை எடுத்துரைத்துள்ளார். 'ஒரு துளி' என்னும் தலைப்பை மையப்படுத்தும் நாடகமானது, பணக்காரர் நாள்தோறும் ஆடம்பரமாக வாழ்ந்தான், அவனுடைய வாசலருகில் இலாசர் என்னும் ஏழை ஒருவன் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தான். இருவரும் மரணித்தபோது பணக்காரன் நரகத்தில் தள்ளப்படுகிறான். மோட்சத்தில் ஆபிரகாமின் மடியில் இருந்த இலாசரை தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து ஒரு துளி நீரினால் தனது நாவைக் குளிர்ச்சி செய்ய அனுப்பும் எனக் கூறும் உச்சக் கட்ட நிகழ்வு இந்நாடகத்தின் தலைப்பாய் அமைந்துள்ளது.

'எழுதிய கரம்' என்னும் நாடகத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் அழைத்து வந்து குருவே இவளை நாம் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளோம் இத்தகைய குற்றம் செய்தவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பதும் மோசே எமக்குக் கொடுத்த சட்டம். உம்முடைய கருத்து எதுவோ எனக் கேட்கிறார்கள். இயேசு "உங்களுள் பாவம் செய்யாதவர் முதலில் கல்லை எறியட்டும்" எனக் கூறி தரையில் எழுதிக்கொண்டிருந்தார். இயேசு தரையில் எழுதிய அந்த சந்தரப்பமே நாடகத்தின் உச்சக்கட்ட என்பதை உணர்ந்த ஆசிரியர் அதனையே நாடகத்தின் தலைப்பாகவே 'எழுதிய கரம்' என வழங்கியுள்ளார் என்பது வியக்கவைக்கின்றது.

**இலக்கிய நயம் பொருந்திய பாடல்கள் இடம் பெறுதல் (இவை கீர்த்தனை வடிவிலானவை)**

பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நாடகத்தின் இடையிடையே பாடல்களை வழங்கியுள்ளார். 'செந்தணல்' என்னும் நாடகத்தின் இறுதியில் நாடகத்திற்கே பொருத்தமான பாடல்களை வழங்கியுள்ளார். இதில் இடம்பெறும் பாடல்கள் கீர்த்தனை வடிவில் அமையப்பெற்றுள்ளன.

> இறைவா வாழ்க! இஸ்ரயேல் இனம் வாழ்க!
> இலட்சிய வீரர் வாழ்க!...(மரியசேவியர், 2019)

'குவலயம் பெற்ற குழந்தை' என்னும் நாடகத்தில் இறைவன், ஆதாம், ஏவாள் இவர்களுக்கு இடையிலான உரையாடல் பாடல் வடிவில் அமைந்துள்ளது. ஏவாள் பாவம் செய்ததால் இவரைத் தொடர்ந்து வந்த சமூகத்தையும் சந்ததியையும் அது பாதித்தது என எடுத்துரைத்துரைக்கையில், "துணையென வந்தவள் துயரையும் தந்தாள்…" (மரியசேவியர், 2019) என அந்த பாடல் தொடர்கின்றது. தொடர்ந்து இறைவன்,



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

''தாயாய் படைத்தேன் பெண்ணே! ஏன்
சேயாய்ப் பெற்றாய் வீண் பாவம்'' (மரியசேவியர், 2019)

என கேட்கின்ற வகையில் நாடகத்தில் இடையிடையே பாடல்களையும் ஓசை நயம் மிக்க உரையாடல்களையும் கையாண்டுள்ளார்.

'சோதனைக் களம்' என்னும் நாடகத்தில் இறுதியில் நாடக ஆசிரியர் சோதனை என்பது இறைமகன் கிறிஸ்துவையும் விட்டுவைக்கவில்லை என்பதை எடுத்துரைப்பது, தீய நாட்டங்களை தீக்கிரையாக்கி இறைவன் திருவருளில் அவர் திரு வார்த்தையில் வாழ்வோம்! வளர்வோம்! என்ற கருத்துடன் நிறைவு செய்கின்றார். இதனை மிகத் தெளிவான விருத்தப்பா வடிவில் பாடலை அமைத்துள்ளார்.

''ஈசனாம் யேசு நச்சப் போயுடன் பொருதி வென்று
தாசராம் தரணியோர்க்கு தனிநெறி தந்தார் அன்றோ
மனித வாழ்வில் மாசுரைத்து மக்களை மயக்க மாயத்
தாழ்வினில் விழுத்தியாட்டும் சோதனைக் களத்தில் வெல்வோம்!''

ஏனைய நாடகங்களுடன் ஒப்பிடும்போது 'குவலயம் பெற்ற குழந்தை' என்னும் நாடகத்தில் அதிகமான பாடல்கள் இடம்பெறுவதுடன், அவை எளிமையானவையாகவும், அவற்றின் உரையாடல் பகுதிகள் ஓசை நயம் மிக்கனவாகவும் அமையப்பெற்றுள்ளன.

**விவிலியத்திலுள்ள பழைய-புதிய ஏற்பாட்டு விடயங்களை ஒரே இடத்தில் சங்கமிக்கச் செய்தல்**

மறைபொருள் நாடகங்களின் மிக முக்கிய கூறு விவிலிய கருத்துக்களை எடுத்துரைத்தல் இதனை ஆசிரியர் திறம்பட மேற்கொண்டுள்ளமை அதன் ஒரு சிறப்பாகும். நாடகத்தின் கதை போக்கை சுவாரிசியமாக எடுத்துரைத்துக்கும் ஆசிரியர் சில முக்கிய விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். உதாரணமாக, 'செந்தணல்' என்னும் நாடகத்தில் வரும் மூன்றாவது காட்சியில் கவலைக்குரிய செய்தியாக 'ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்' என எடுத்துரைக்கும் சந்தர்ப்பத்தில், யூதர்கள் மிக இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்த 'ஓய்வு நாள் சட்டம்' குறித்த குறிப்பும் முன்வைக்கப்படுகின்றது. அதாவது ஓய்வு நாளில் யூத மக்கள் அவர்களை (கிரேக்கரை) எதிர்க்க மாட்டார்கள் என்பதை நன்கு அறிந்து அவர்களைக் கொலை செய்தார்கள். அது மட்டுமல்லாது இப்பகுதியில் பழைய ஏற்பாட்டுச் சட்டமும் புதிய ஏற்பாட்டில் இயேசு முன்வைத்த சட்டமும் ஒரே இடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 'சட்டம் மனிதனுக்காகக் கொடுக்கப்பட்டது. மனிதன் சட்டத்திற்காக அல்ல' என்னும் விடயத்தையும் இங்கு ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

பழைய ஏற்பாட்டிலுள்ள யோபுவின் கதையை மையப்படுத்தும் 'கவலையின் எல்லை' என்னும் நாடகத்தில் "ஒருவருக்குத் துன்பம் ஏற்படுவது அவன் செய்த குற்றத்தின் விளைவு அல்ல. ஆனால் மக்கள் அவ்வாறு மட்டுமே எண்ணுகிறார்கள். அவ்வாறு எண்ணுவது தவறு, நீதிமானும் இறை திட்டத்தை நிறைவேற்ற துன்பப்படலாம்'' என பழைய ஏற்பாட்டின் போதனையை முன்வைக்கும் இடத்தில் புதிய ஏற்பாட்டுக் கருத்துகளையும் இணைத்துக் கூறுகின்ற தன்மையைக் காணலாம். அதாவது இயேசு கன்னி மரியிடம் பிறந்து. கல்வாரி மலையில் கவலையின் கடவுளாய் இறந்தாரே என்பதை எடுத்துரைத்துள்ளார்.

செந்தணல் நாடகத்தில் இடம்பெறும் ஐந்தாவது காட்சியில் யூதா பழங்கால வரலாற்றை எடுத்துரைக்கின்றார். அதாவது, இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்த போது அவர்களைத் துரத்தி வந்த பார்வோன் படைக்கு என்ன நேர்ந்தது என்னும் விடயத்தை நினைவூட்டுகின்றார். அதன் போது, 'மீட்பர்' குறித்த விடயத்தையும் எடுத்துரைக்கின்றார். (மரியசேவியர், 2019) இயேசு


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

அலகையினால் சோதிக்கப்பட்டபோது "நீர் இறைமகன் என்றால் இந்த கற்களை அப்பம் ஆக்கும்படி கட்டளையிடும்" என்று குறிப்பிடும் பகுதியுடன் தொடர்ச்சியாகப் பழைய ஏற்பாட்டின் நிகழ்வினையும் இணைப்பது ஆசிரியரின் ஆழமான விவிலிய அறிவை எடுத்துரைக்கின்றது. அதாவது,

"பண்டைய காலம் ஒரு நாள்
பரமனின் மக்கள் யூதர்
பசியாலே வாடுகின்றோம்
புசித்திடத் தருவீர் என்று
மண்டிட மோயீசன் தன்
மோன நற் செபத்தினாலே
வான தந்தை மன்னா!
என்னரும் அப்பம் தன்னை
கானக மாரி போல் மொழிந்த அப் புதுமை" (மரியசேவியர், 2019)

மேலும் புதிய ஏற்பாட்டில் மத்தேயு 14:13-21, மாற். 6:30 பகுதிகளில் வரும் இயேசுவின் அருஞ்செயல்களில் 'ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்' எனும் விடயத்தையும் இதனோடு இணைத்துக் கூறுகிறார். ஐயாயிரம் பேருக்கு உணவளித்த இயேசு கிறிஸ்து தனது நலத்திற்காக, சொந்த நன்மைக்காகக் கற்களை அப்பமாக மாற்றி வயிற்றுப் பசியை போக்கவில்லை என்பதை இப்பகுதியில் உறுதிப்படுத்தியுள்ளார்.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டின் யோவான் 8:6-11 பகுதியை மையப்படுத்தும் 'எழுதிய கரம்' என்னும் நாடகத்தில் 'விபசாரத்தில் பிடிபட்ட பெண்' பற்றிய நிகழ்வை மையப்படுத்தும் பகுதியிலே வயோதிபர் யூத சட்டங்களை எடுத்துரைக்கிறார் "பாவிகளின் தலையான பாவமான விபச்சாரத்தில் எந்தப் பெண்ணாவது பிடிக்கப்பட்டால் கர்ணகொடூரமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது எமது பழம் பெரும் கொள்கை! இதற்கு எல்லாம் முரணாக கிறிஸ்துவின் போதனை! பாவிகளைக் கண்டிக்காது பரிவிரக்கம் காட்டுகிறார்! எனவே அவரை தொலைப்பதற்குச் சதி செய்கிறோம் என்பதாக அமைகின்றது.

**ஓசைநயம் மிக்க உரையாடல்கள்**

'செந்தணல்' என்னும் நாடகத்தில் இடம்பெறும் மூன்றாவது காட்சியில் யூதாவுக்குத் தலைமைப் பொறுப்பை தந்தை மதத்தியா வழங்கும் போது "சென்று வா மகனே! வென்று வா!, என் சிங்கமே! வீரத்தில் ஈடும் இணையும் இல்லாத இளவலே! சிறுப்பத்திலிருந்து போர்பயின்ற நீ எமது போர்பணிகளின் பொறுப்பை ஏற்றுக் கொள்." (மரியசேவியர், 2019) மேலும் இந்த நாடகத்தில் இடம்பெறும் காட்சி 11 இல் சூழ்ச்சிக்காரரின் சதி அறிந்து யூதா பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சொல்லிலே எத்துணை அழகு! எத்துணைக் கனிவு! ஆனால், நெஞ்சிலே வஞ்சம்! அடிநாக்கில் நஞ்சு! நுனிநாக்கில் தேனும் பூசிய வார்த்தை அடுக்குகள், அலங்காரங்கள் அபாரம்." (மரியசேவியர், 2019)

'சோதனைக் களம்' என்னும் நாடகத்தில் இயேசு சோதிக்கப்படல் குறிப்பைத் தொடர்ந்து நாட்பது நாட்கள் சாதாரண மனிதன் உணர்வுகளோடு உணவு தவிர்த்து, நோன்பிருந்தார் அதன்பின் பசியுற்றார். அலகை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சதித்திட்டமிடுகிறது இதனை ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தீட்டுகிறேன்! ஓர் திட்டம்! காட்டுகிறேன் என் கொட்டம்! மூட்டுகிறேன் என் சோதனையின் தீயை! மாட்டுகிறேன்! வேதனைக்குள்! இந்த மதி கெட்ட கிறிஸ்துவை!... (மரியசேவியர், 2019) மேலும் 'வா மகனே வா' என்னும் நாடகம் இளையு மகள் தந்தையை விட்டு, வீட்டை விட்டு செல்ல முடிவெடுத்து விட்டான். உரிமையைக் கோருகின்றேன்! கேட்கும் உடைமையை கொடுப்பது உங்கள் கடமை! அதை மறுப்பது வெறும் மடமை! என்னும் பகுதியிலும் ஓசை நயம் மிகுந்துள்ளதை அவதானிக்கலாம்.


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

**இலக்கியங்களில் எடுத்துக்காட்டுக்களை முன்வைத்தல்**

ஆசிரியர் தனது சொந்த மொழிநடையை மட்டும் பயன்படுத்தாது ஏனைய இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுக்களை முன்வைத்துள்ளார். *''அச்சம் என்பது மடமை! அஞ்சாமை என்பது உடைமை''* என்னும் கண்ணதாசனின் எடுத்துரைப்பை நாடகத்தில் கையாண்டுள்ளார். பிதாபிதாக்களுடைய தேவன் எமக்காகப் போரிடுவார் என்று உறுதி கூறி யூதா உறுதி மொழி வழங்குகிறார். இதனை எடுத்துரைக்கும் பகுதிலில் *''அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சம் என்பது இல்லையே''* என்னும் பாரதி வரிகளைக் கையாண்டுள்ளார்.

**அடுக்குமொழிப் பிரயோகம்**

'செந்தணல்' நாடகத்தில் வரும் ஆறாவது காட்சியில் சமூகத்தில் வயது முதிர்ந்த ஒருவர் மக்கபேயரின் பெருமையை எடுத்துரைக்கின்றார். இப்பகுதியில் யூதாவின் புகழ் அடுக்கு மொழியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. *''வீர வம்சத்தைச் சேர்ந்தவன் அவன்! தீரச் செயல்களில் சிங்கத்தை ஒத்தவன்! தேடிப் போரிடுவதில் அவனுக்கு அவனேதான் நிகர்! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளை, வீட்டை விட்டுத் துரத்தி, கோட்டைமேல் இருக்கும் கொடிய எதிரிகளைக் கூட காட்டையே கதி அடையச் செய்த நங்காரச் சிங்கம் அவனே!''* (மரியசேவியர், 2019) என்றவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**உவமைத் தொடர்களின் பிரயோகம்**

'எழுதிய கரம்' என்னும் நாடகத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் குறித்து எடுத்துரைக்கப்படும் பகுதியில் "இயேசு இப்பெண்ணை நோக்கி, மகளே உன் மேல் குற்றம் சுமத்தியவர்கள் எங்கே என்று கேட்கிறார்.'' இதற்கு அப் பெண் குறிப்பிடும் பதிலை ஆசிரியர் உவமைத் தொடராகக் கையாண்டுள்ளார்.

கறைபட்ட எந்தன் பிழை உணர்ந்து, அவர்களது கருணையை வேண்டிக் கலங்கி நின்றேன். ''அம்புக் கணைகள் போலக் கூரான கற்கள் என்னைக் கொல்வதற்குக் குறி பார்த்த வண்ணம் இருந்தன. கொல்லும் வேங்கைகளின் கொடும் பசிக்கு இரையாகும் புள்ளிமான் போல இரத்தப் பழி முடித்துக் களிவெறி கொள்ளும் ஓநாய்க் கூட்டத்திடையே அகப்பட்ட செம்மறி ஆடு போலக் கதறினேன், பதறினேன், துடித்தேன், துவண்டேன், விழுந்தேன், அழுதேன் செய்வதறியாது திகைத்தேன்'' *(மரியசேவியர், 2019)* எனக் குறிப்பிடுகின்றார்.

பகைவர்கள் யூதாவின் பெயரைக் கோட்டாலே பயப்படுவார்கள் என்பதைக் குறிப்பிட ''கோடையிடி கேட்ட நாகம் போலப் புத்தி பேதலிக்க வைத்த யூதா, ஆண் சிங்கம் போல ஆணவத்துடன் பாய்ந்து மலை போன்ற பகைவரையும் தலை சாய வைத்த யூதா.''

பழைய ஏற்பாட்டிலுள்ள யோபுவின் கதையை மையப்படுத்தும் 'கவலையின் எல்லை' என்னும் நாடகத்தில் "ஒருவருக்குத் துன்பம் ஏற்படுவது அவன் செய்த குற்றத்தின் விளைவு அல்ல. ஆனால் மக்கள் அவ்வாறு மட்டுமே எண்ணுகிறார்கள். அவ்வாறு எண்ணுவது தவறு, நீதிமானும் இறை திட்டத்தை நிறைவேற்ற துன்பப்படலாம் என்பதையே எடுத்துரைக்கும். இதனைக் குறிப்பிடும் ஆசிரியர் ''தங்கம் நெருப்பிலே புடமிடுவதைப்போல ஒருவனின் உள்ளமும் துன்பத்தினாலே தூய்மைப்படுத்தப்படலாம்'' எனக் குறிப்பிடடுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.


*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

***அவலச்சுவை (புலம்பல்)***

'கிறிஸ்தவ நாடகங்களுக்கே உரிய அவலச்சுவையை' கையாண்டுள்ளார். செந்தணல் என்னும் நாடகத்தில் வரும் பதின்மூன்றாவது காட்சியில் யோனத்தானும் அவனின் இரு மக்களும் கொலை செய்யப்பட்டுவிட்டார்களே என சீமோன் பின்வருமாறு புலம்புகிறார். "இறைவா! இறைவா! ஏன் இந்த சோதனை! எனக்கு ஏன் இந்த வேதனை! உமக்காக உமது நெறிக்காக! நீர் காட்டிய வழிக்காக நல் வாழ்விற்காக! உம் திரு நாட்டிற்காக! உயிரையே சதமென என எண்ணி எழுந்தோம்! வாள் எடுத்தோம், போர் தொடுத்தோம், வஞ்சினம் கூறினோம், அஞ்சவே மாட்டோம் என உறுதியிட்டு கூறினோம்…" (மரியசேவியர், 2019) எனப் புலம்பி அழும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிறிஸ்தவ நாடகங்களுக்கே உரித்தான முக்கிய பண்பு அவலச்சுவை அதனை இப்பகுதியில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

முதலில் யூதாவின் மரணத்தை நினைத்து, நினைத்துப் புலம்பிய அவன் தொடர்ந்து யோனத்தான் குறித்துப் புலம்புகிறான். "வஞ்சகமே அறியாத கொஞ்சு மொழித்தம்பி யோனத்தான் எல்லோரும் ஒருவர் ஒருவராய் போய்விட்டார்கள்! என்னைத் தனியே தவிக்க விட்டு!… (மரியசேவியர், 2019) என மிக வேதனையில் சீமோன் புலம்பி அழும் காட்சி பார்வையாளர் மனதிலும் துக்க உணர்வை ஏற்படுத்தியிருக்கும்.

இதில் இடம்பெறும் இரண்டாவது நாடகமான 'கவலையின் எல்லை' என்னும் நாடகத்தில் நீதிமானான யோபுவின் அவல நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுளின் அனுமதியுடன் சாத்தான் யோபுவைச் சோதிக்க, யோபு தனது பிள்ளைகள், சொத்து, உடல் நலம் என்பவற்றை இழந்தார். இவர் பல துன்பங்களை அனுபவிக்க நேரிட்ட போதிலும் ஆண்டவரைக் சபிக்கவில்லை மாறாக 'தான் பிறந்த நாளை சபிக்கிறார்' ஆண்டவரால் கைவிடப்பட்டு வேதனையில் வாடுவதை 'பிறக்காமல் இருப்பதே' மேல் என உணர்கிறார் போலும். உடல் முழுவதும் புண்களால் வேதனைப்பட்ட அவர் தாங்க முடியாமல் 'கருப்பையில் இறந்திருக்க விரும்புகின்றார். அவரது அளவ நிலை நாடகம் முழுவதும் எடுத்துரைக்கப்படுகின்றது.

யோபுவின் ஆண் பிள்ளைகளின் மரணம் குறித்து யோபுவின் வேதனை யோபுவின் பாடலில் பின்வருமாறு வெளிப்படுகின்றது. "ஆ இறைவா! இறைவா! இது என்ன சோதனை இறைவா! இறைவா! தாயின் உதரத்திலிருந்து வெறுமையில் வெளிப்பட்டேன் மீண்டும் அதே வெறுமைக்குத் திரும்புவேன். இறைவன் தந்தார்! இறைவனே எடுத்தார்!…" (மரியசேவியர், 2019)

'சோதனைக் களம்' என்னும் நாடகத்தில் வரும் முதல் மூன்று பாத்திரங்களும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை குறித்துப் புலம்பும் பாணியில் அமைத்துள்ளது. அதில் வரும் இரண்டாவது பாத்திரம் "கடுகளவு ஆற்றலைக் கொடுத்து கடலளவு ஆசையைத் தந்தாயே இறைவா! மனிதப் பிறவியாக இருந்தும் அப்பிறவிக் கட்டுக்குள் அடங்கி வாழாமல், வீண் பெருமையுடன் மாண்டழியும் மகிமையுடன் மிடுக்காக வாழ வேண்டும் என்ற எண்ணத்தால், செருக்கால், அகங்காரத்தால், ஆணவத்தால் என்னை அழித்துக் கொண்டிருக்கும் இந்த சோதனை தான் ஏன்? தெய்வமே!" (மரியசேவியர், 2019)

'வா மகனே வா' என்னும் நாடகத்தின் இதன் மூன்றாவது காட்சியில் தந்தை இளைய மகனை நினைத்து மனம் கலங்கும் காட்சியாக அமைகின்றது. தந்தை புலம்புகின்றார் "ஆ மகனே! என் மகனே! பெற்ற மனம் வெடிக்குதடா! பெரும் அன்பு துடிக்குதடா! நன்மை தீமை புரியாது நீ வாழ்க்கை என்ற கடலில் காலடி எடுத்து வைத்தாயே! மாய வலை வீசி மயக்கம் மொழி பேசி தன் மையலில் மூழ்க வைக்கும் மண்ணுலகம் உன்னை என்னதான் செய்துவிட்டதோ யானறியேன்." இவ்வாறு நாடகங்களில் அவலச்சுவையையும் வெளிப்படுத்தியுள்ளார்.



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

நாடகத்தின் இடையிடையே பழமொழிகளைக் கையாண்டுள்ளார். ஒன்றிணைந்து போராடுவோம் என்ற கருத்தை எடுத்துரைகையில் "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்று குறிப்பிட்டு ஒற்றுமையே பலம் என்பதை வலியுறுத்தியுள்ளார். அனுபவத்தில் கற்றல் குறித்து குறிப்பிடுமிடத்தில் ''சூடு பட்ட பூனை அடுப்படியை நாடாது'' எனக் குறிப்பிடுவது போன்று சில இடங்களில் ஆண்டவனும் ஆட்டுக்குட்டியும், அயோக்கிய பயலே!, படுபாவி போன்ற சாதாரண பேச்சு வழக்குச் சொற்களையும் நாடகங்களின் இடையிடையே கையாண்டுள்ளார். இவ்வாறு விவிலிய உள்ளடக்கங்களை நாடகங்களினூடாக எடுத்துரைக்கும் ஆசிரியர், அதன் நடையை இலக்கிய செலுமையோடும் கையாண்டுள்ளமை இலக்கியத் துறையில் அவருக்கு இருந்த ஆளுமையை அடையாளம் காட்டியுள்ளது.

**முடிவுரை**

நீக்கிலாப்பிள்ளை மரிசேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்களில் பத்து நாடகங்கள் ஒரு நூல் தொகுப்பாக விவிலிய விடயங்களை மையப்பொருளாகக் கொண்டு வெளியிடப்பட்டமையானது ஆசிரியரின் ஆழமான விவிலிய அறிவை வெளிப்படுத்தியுள்ளது. நூலில் விவிலிய நிகழ்வுகளை மிகத் தெளிவாகவும் எளிய நடையிலும் சூழமுக்குப் பொருந்தும் வித்திலும் இலக்கிய நயத்துடன் வழங்கியுள்ளார். இது ஆசிரியரின் தமிழ்ப் புலமைத்துவத்தை எடுத்துரைத்துள்ளது. ஆசிரியர் தனது சொந்த கருத்துக்களை மட்டுமல்லாது ஏனைய இலக்கியங்களின் எடுத்துக்காட்டுக்களையும் கையாண்டுள்ளார். இதில் உள்ளடங்கும் பத்து நாடகங்களின் தலைப்புகளிற்கும் இசைவான உள்ளடக்கங்களை நாடகத்தில் கையாண்டுள்ளார். இந் நாடகப் பிரதிகள் தமிழ்க் கிறிஸ்தவ நாடகத்துறை ஆய்வாளர்களின் ஆய்வு பரப்பிற்கு மேலும் வலு சேர்க்கும். நாடக ஆற்றுகையிலும் அதன் எழுத்துருவாக்கத்திலும் முன்னின்று பணியாற்றுபவர்களுக்கு மரியசேவியர் அடிகளின் அணுகுமுறைகள் உதவியாய் அமையும். நாடக ஆசிரியர் சாதாரண மக்கள் கற்பதற்குக் கடினமான திருவிவிலியத்திலுள்ள வரலாறு பகுதிகளையும் மிக இலகுவாகவும் இரசனையுடனும் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை என்பது நாடகத் துறை சார் ஆர்வலர்களுக்கு மட்டுமல்ல மறைப் பணியாளர்களுக்கும் பயனுடையதாய் அமையும்.

**உசாத்துணை நூல்கள்**

இரபேல், ஏ. (2007). *திருவிவிலியம் ஓர் அறிமுகம்.* குழித்துறை: வார்த்தை வழிபாடு பணிக்குழு, தேடல்.

எரோனிமுஸ், கு. (பொ.ப.). (2006). *திருவிவிலிய விளக்கம – மாற்கு.* திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம்.

எரோனிமுஸ், கு. (பொ.ப.). (2008). *திருவிவிலிய விளக்கம – மத்தேயு.* திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம்.

எரோனிமுஸ், கு. (பொ.ப.). (2013). *திருவிவிலிய விளக்கம – லூக்கா.* திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம்.

எரோனிமுஸ், கு. (பொ.ப.). (2018). *திருவிவிலிய விளக்கம – யோபு.* திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம்.

கனக செந்திநாதன். (1964). *ஈழத்து இலக்கிய வளர்ச்சி.* கொழும்பு: அரசு வெளியீடு.

ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன். (2009). *தமிழ்க்கிறிஸ்தவ இலக்கியங்கள்.* யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*

ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன். (2001). *கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள்.* யாழ்ப்பாணம்: கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்.

*திருவிவிலியம் - பொதுமொழிபெயர்ப்பு.* (2018). இந்தியா: தமிழ் நாட்டு கத்தோலிக்க மறைக்கல்வி நடுநிலையம்.

பீட்டர் அபீர், அ. அலேசியஸ் சேவியர், ஆ. (2005). *திருவிவிலியம் ஓர் அறிமுகம்.* திருச்சிராப்பள்ளி: அருள்வாக்கு மன்றம்.

மரியசேவியர், நீ. (2019). *மறைபொருள் நாடகங்கள்: தொடுதி-1.* யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம்.

மௌனகுரு, சி. (1992). *பழையதும் புதியதும்.* மட்டகளப்பு: விபுலம் வெளியீடு.

யோண்சன் ராஸ்குமார், யோ. (1999). 'திருப்பாடுகளின் காட்சி - சடங்கிலிருந்து நாடகம் வரை'. *கலைத்தூது.* யாழ்ப்பாணம்: திருமறைக்கலாமன்றம்.



*ISSN (Print): 1391-6815* *ISSN (Online): 2738-2214*